*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **18 செப்டம்பர் 2025**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மூலமாக வழங்கப்படும் முதியோர், ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தட்டாஞ்சாவடி மார்க்கெட் கமிட்டி மைதானத்தில் இன்று (18.09.2025) நடைபெற்றது.

மாண்புமிகு துணை நிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஓய்வூதியம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். புதிதாக சேர்க்கப்பட்ட 10,000 ஓய்வூதிய பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குவதை தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந.ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், மாண்புமிகு அமைச்சர்கள் திரு A. நமச்சிவாயம், திரு K. லட்சுமி நாராயணன் திரு C.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான் மகளிர் மட்டும் குழந்தைகள் மேம்பாட்டு துறை செயலர் திரு ஜெயந்தகுமார் ரே, இயக்குனர் செல்வி முத்து மீனா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.